# Get **more** out of Libraries

**மக்களின் இணையத்திற்கு வரவேற்கிறோம்**
எல்லா ஹேம்ப்ஸ்பியர் நூலகங்களிலும் இலவச இணையதள சேவையுடன் மைக்ரோசாப்ட் அலுவலகம் மென்பொருளுடன் கணினிகள் (மக்களின் இணையம்) உள்ளன. ஒவ்வொரு நூலகத்திற்கும் ஸ்கேனரும் மற்றும் திறன் குறைபாடுகளுள்ள மக்களுக்கு உதவிட மேலதிக வசதிகள் கொண்ட குறைந்தபட்சம் ஒரு கணினியும் உண்டு. கணினிகளை உபயோகிப்பது இலவசம், ஆனால் அச்சிடவும், வேலைகளைச் சேமிக்க குறுந்தகடு வாங்கவும் கட்டணங்கள் உண்டு.

- **உங்களிடம் உங்கள் நூலக அட்டை எண் மற்றும் PIN இருந்தால்** கிடைக்கச்கூடிய எந்த கணினியையும் உடனே நீங்கள் உபயோகிக்கலாம். உங்கள் PIN தெரியவலல்லை என்றால் அலுவலக ஊழியரிடம் கேளுங்கள்.
- **ஒரு நூலக அட்டை உங்களிடம் இல்லா விட்டால்** கணினியை எப்படி உபயோகிப்பது என ஊழியரிடம் கேளுங்கள். எல்லா உபயோகிப்பாளர்களும் கணினியில் நுழைகையில் எங்களின் உபயோக நிபந்தனைகளை கண்டிப்பாக ஒப்புக் கொள்ள வேண்டும்.

ஒரு கணினி கிடைக்கும் வாய்ப்பு இருந்தால் **ஒவ்வொரு நாளும் ஒரு தனி நேரத்தொடர்** நீங்கள் பெறலாம். நூலக ஊழியரிடம் நீங்கள் கேட்டால் மேற்கொண்டு நேரத் தொடர்புகள் கிடைக்கலாம். நீங்கள் உபயோகியுக்கும் கணினியைப் பொறுத்து தொடரின் நீளம் இருக்கும்.
உங்களிடம் ஒரு நூலக அட்டை இருந்தால் 7 நாட்கள் வரை முன்னாதவே 1 தொடருக்கு ஒரு **கணினியை நீங்கள் முன்பதிவு செய்யலாம்**. நூலகக் கணினிகளை உபயோகிக்கும் பொழுது நீங்கள் இணையம் மூலம் பதிவு செய்யலாம், அல்லது ஒரு ஊழிய உறுப்பினரிடம் கேளுங்கள். பதிவுக்கு உங்கள் நூலக அட்டை எண் உங்களுக்கு தேவை. காத்திருக்கும் மக்களுக்கு அடுத்து கிடைக்கக்கூடிய கணினியை ஒதுக்கிட சில பெரிய நூலகங்களில் ஒரு வரிசைத் திட்டம் உள்ளது.

**கணினியிடமிருந்து நீங்கள் முழுவண்ணத்தில் அச்சுப் பிரதிகள் பெறலாம். எழுதக்கூடிய குறுந்தகடுகளில்** அல்லது ஒரு USB கருவியில் நீங்கள் சேமித்து வைக்கலாம். ஒவ்வொரு நூலகமும் எழுதக்கூடிய குறுந்தகடுகளை விற்கின்றன. பிளாப்பி டிஸ்க்குகளில் நீங்கள் சேமிக்கக் கூடாது.

தங்களது பெற்றோர் அல்லது காப்பாளர் அவர்களுக்கு அனுமதி கொடுக்கச் சொல்லி ஒரு படிவத்தில் கையொப்பமிட்டு ஒரு தடவை கொடுத்தால், 9 to 15 வயதுள்ள **குழந்தைகள் மற்றும் சிறுவயதினரும்** கணினிகளைப் பயன்படுத்தலாம். பெற்றோர் ஒருவர் அல்லது 16வயது அல்லது அதற்கு மேலான வயதுள்ள கவனிப்பாளருடன் உடன் இருந்து உபயோகித்தால் 8 வயது அல்லது அதற்குக் கீழே உள்ள குழந்தைகளும் கணினியை உபயோகிக்கலாம்.
**மிகவும் விளக்கமான உதவி** ஆங்கிலத்தில் கணினியில் உள்ளது. மற்றும் ஊழியர் அடிப்படைச் செயல்களில் உதவுவார். பெக்டா இணையதளத்தில் பொதுவான கணினி பதங்கள் பலமொழிகளுக்கு மொழி பெயர்க்கப்பட்டுள்ளன:
http://schools.becta.org.uk/index.php?section=iu&catcode=_is_el_cl_re_04&rid=9877

**கணினிகளில் எவ்வாறு உள்நுழைவது**
தொடங்க OK மீது சுட்டவும்
உபயோக நிபந்தனைகளை ஒப்புக் கொள்ள OK மீது சுட்டவும்
உள்நுழையும் திரைமீது:

- உங்கள் நூலக அட்டை எண்ணை தட்டச்சு செய்யவும்(B உட்பட) அல்லது முதற் கட்டத்தில் விருந்தினர் கணக்கு எண்ணை.
- இரண்டாம் கட்டத்தில் உங்கள் கடவுச் சொல்லைத் தட்டச்சு செய்யவும். உங்களிடம் ஒரு நூலக அட்டை இருந்தால் உங்கள் PIN ஐ கடவுச் சொல்லாக உபயோகிக்கவும்.

நூலகத்தில் சேர்வதும் மற்றும் புத்தகங்களை இரவல் பெறுவதும் இலவசமாகும், ஒரு ஊழியர் உறுப்பினரை கேளுங்கள் போதும் தற்காலிக சீட்டு தவிர, நெடுந்தகடுகள், குறுந்தகடுகள் மற்றும் பிளேஸ்டேசன் விளையாட்டுக்களும் ஒரு சிறிய கட்டணத்திற்குக் கிடைக்கும். பல்வேறு மொழிகளில் தகவலுக்கு: http://www.multikulti.org.uk/en/education/welcome-to-your-library/

Hampshire
County Council